## රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
## பதிவாளர் நாயகம் திணைக்களம்
## REGISTRAR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } தமிழ் மொழிப்பெயர்ப்பு RG/MBD/சுற்றுநிருபம்

ප්‍රධාන කාර්යාලය
தலைமை அலுவலகம்
HEAD OFFICE

තැ. පෙ. අංකය / த. பெ. இல. / P. O. Box No. } 565

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

234/A3, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.
234/A3, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla.

දිනය / திகதி / Date } 2022.06.07

சுற்றுநிருபம் இலக்கம் – 09/2022

அனைத்து பிரதேச செயலாளர்கள்/ மாவட்டப் பதிவாளர்கள் மூலம்

மேலதிக மாவட்டப் பதிவாளர்களுக்கு,

**<u>நாட்டில் நிகழ்காலத்தில் நிலவும் பௌதிக வளங்கள் முகாமைத்துவத்துவத்தின் தேவைக்கருதி பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை வழங்கல்</u>**

நாட்டில் நிகழ்காலத்தில் நிலவும் பொருளாதார சிக்கல் நிலைமை காரணமாக எழுதுப்பொருட்கள் போலவே அச்சிடல் இயந்திரங்களுக்கு தேவையான டோனர் இனை பெற்றுக் கொள்வதற்கு சிரமம் நிலவுவதினால் பிறப்பு, விவாகம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளினை வழங்குவதில் சிக்கல் நிலைமை உருவாகும் அவதானம் உள்ளது.

02. இதற்கான தீர்வாக விண்ணப்பதாரரிடம் தெளிவான, சுத்தமான பிரதிகள் இருக்குமாயின் அதனை பரிசீலனை செய்துப்பார்த்து மீண்டும் உறுதிப்படுத்தும் முத்திரையுடன் வழங்கும் முறைமையினை தற்காலிகமாக நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகையினால் மேற்படி சான்றிதழ்களின் பிரதிகளினை வழங்கும் பொழுது கீழ் குறிப்பிடப்பட்ட முறைமையினை கடைப்பிடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

I. உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை கோருபவரிடம் உரிய சான்றிதழின் தெளிவான, சுத்தமான உறுதிப்படுத்தப்பட்ட பிரதி இருக்குமாயின் அதனை மாவட்டப் பதிவாளர் பிரிவினால் பேணப்படும் மூலப் பிரதி அல்லது e-MBD தரவு முறைமை மூலம் பரிசீலனை செய்து உண்மையான சரியான பிரதி என உறுதிப்படுத்தல்.

II. அவ்வாறு உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் விண்ணப்பதாரரிடம் உள்ள பிரதியிலேயே கீழ் குறிப்பிடப்படும் முத்திரை மற்றும் சான்றிதழினை ஒப்பமிடும் அலுவலரின் பதவி முத்திரையுடன் அதனை விண்ணப்பதாரருக்கு வழங்குதல்.

(உரிய முத்திரை பிரதேச செயலகங்கள் மூலம் தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும்.)

> விண்ணப்ப படிவ இலக்கம் ;-----------------------------
>
> விண்ணப்பாரரிடன் உள்ள ........................................ மாவட்டத்தின் ........................................ பிரிவிற்குரிய இந்த சான்றிதழ் இந்த அலுவலகத்தில் பேணப்படும் மேம்படுத்தப்பட்ட தரவு முறைமையின் தகவல்கள் / பிறப்பு /விவாகம் / இறப்புச் சான்றிதழ்களுடன் பரிசீலனை செய்துப் பார்த்து ஒப்பிடப்பட்ட சான்றிதழ் என உறுதிப்படுத்துகின்றேன்.
>
> பரீட்சிக்கப்பட்டது ;--------
>
> திகதி ;-...............
>
> ........................................................................
>
> மேலதிக மாவட்டப் பதிவாளர்

III. இங்கு உரிய சான்றிதழின் மூலப் பிரதி அல்லது e-BMD தரவு முறைமை மூலம் பரிசீலனை செய்துப் பார்த்து சரியான உண்மைப் பிரதி என உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பதுடன் சான்றிதழ் வழங்குவதற்கு உரிய கட்டணத்தினை அறவிடுவதில் எவ்வித மாற்றமும் நிகழ்த்தப்படல் கூடாது.

03. இந்த முறைமையினை கடைப்பிடிப்பதன் பிரதான நோக்கமாவது எழுதுப்பொருட்கள் மற்றும் அச்சிடலுக்காக தேவையான ஏனைய வளங்களின் பாவனையினை குறைத்தல் என்பதுடன், மேற்படி முறைமையினை கடைப்பிடிப்பதற்கு இயலாத சான்றிதழ்கள் சம்பந்தமாக பொதுவான முறைமையினை கடைப்பிடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

04. நாட்டில் நிலவும் நிகழ்கால நிலைமையினை கருத்திற்கொண்டு மேற்படி முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், இந்த முறைமையினை வெற்றிகரமாக்குவதற்காக தங்களிடம் இருந்தான ஒத்துழைப்பினை எதிர்ப்பார்க்கின்றேன். இந்த சுற்றுநிருபம் 2022.07.20 ந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒப்பம்/ பீ.எஸ்.பீ.அபேவர்தன
பதிவாளர் நாயகம்

பிரதிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | செயலாளர், அரச நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு. | - | தகவலுக்காக |
| 2. | செயலாளர், கல்வி அமைச்சு | - | தகவலுக்காக |
| 3. | அனைத்து அமைச்சின் செயலாளர்களுக்கும் | - | தகவல்களுக்காக மற்றும் உரிய நடவடிக்கைக்காக |
| 4. | ஆணையாளர் நாயகம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் | - | தகவலுக்காக |
| 5. | ஆணையாளர் நாயகம், ஆட்களைப் பதிவு செய்தல் திணைக்களம் | - | தகவலுக்காக |
| 6. | அனைத்து மாவட்ட செயலாளர்கள்/ மேலதிக பதிவாளர் நாயகங்கள் | - | தகவல்களுக்காக மற்றும் உரிய நடவடிக்கைக்காக |
| 7. | திணைக்களத்தின் அனைத்து நிறைவேற்று மற்றும் பதவிநிலை அலுவலர்களுக்கு | - | தகவல்களுக்காக மற்றும் உரிய நடவடிக்கைக்காக |